I யோவான் 5:13 “உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவை எழுதியிருக்கிறேன்”.

ரோமர் 10:13ஐ மறுபடியும் வாசியுங்கள். “ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்”

“அன்புள்ள ஆண்டவரே, நான் குற்ற உணர்வுள்ள பாவி என்று அறிக்கையிடுகிறேன். மேலும் நான் இரட்சிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் அறிக்கையிடுகிறேன். இயேசு என் பாவ கடன்களை கொடுப்பதற்காக சிலுவையில் மரித்தார் என்பதை விசுவாசிக்கிறேன். தயவு கூர்ந்து என் பாவங்களை மன்னியும், என் உள்ளத்தில் வாரும், மேலும் என் ஆத்துமாவை இரட்சியும்.

HopeTractMinistry
of Bethel Baptist Church

P.O. BOX 1115 ● YORK, SC 29745 ● 803-684-1535
WWW.HOPETRACTS.ORG
Where Are You Going? (Tamil) Tract 540



என் நண்பரே, உங்களிடம் வாழ்வின் மிக முக்கிய கேள்வியைக் கேட்கிறேன். உங்களின் நித்தியத்திற்கான இன்பமோ அல்லது துன்பமோ இதை பொறுத்தே அமையும். மிகப் பெரிய கேள்வி நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? என்பதே. இது நீங்கள் ஒரு கிறிஸ்தவ திருச்சபையின் அங்கத்தினரா என்பது அல்ல ஆனால் நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா? என்பதே. இது நீங்கள் எவ்வளவு நல்லவர் என்பதை பொருத்து அல்ல, ஆனால் நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்களா? என்பதே. இயேசு நிக்கொதேமுவிடம் யோவான் 3:7 ல் "…நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறினார்.

பிரியமான ஆத்துமாவே, இப்பொழுது இந்த நிமிஷத்தில் நீங்கள் மரித்தால் நீங்கள் பரலோகத்திற்கு போவீர்கள் என்று அறிவீர்களா? நீங்கள் அதை அறியாவிட்டால் உங்களால் அறியமுடியும். ஆனால் சில போதகர்களின் கூற்றோ அல்லது சில திருச்சபையின் கூற்றோ அல்ல. ஆனால் தேவனுடைய வார்த்தையின் படி நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறியலாம்.

முதலாவது நீங்கள் பாவிகள் என்பதை உணர வேண்டும். ரோமர் 3:10 "அந்தப்படியே : நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" ரோமர் 3:12 "எல்லோரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை.." ரோமர் 3:23 "எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" பாவியான நண்பனே, இயேசு உங்களுக்காக மரித்தார் ஏனென்றால் அவர் உங்களை நேசிக்கிறார். அதனால் நீங்கள் பரலோகத்தில் அவருடனே கூட நித்தியகாலமாய் வாழ்வீர்கள்.

ரோமர் 5:8 "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்".

நீங்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள தவறினால், பாவத்திற்குரிய சம்பளத்தை நிச்சயமாக கொடுக்க வேண்டும், அது மரணம் அல்லது தெளிவாக கூறவேண்டுமென்றால் நித்திய நரக அக்கினி (சங்கீதம் 9:17).

கிறிஸ்து சிலுவையில் உங்களுக்காக செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டால் அழிவில்லாத நித்தியமான வாழ்வு உங்களுக்கு கிடைக்கும். ரோமர் 6:23b "…தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்". ஆம், நீங்கள் இந்த நிமிஷத்தில் இரட்சிக்கப்பட விரும்பினால், இது உங்களுக்கு தேவன் கொடுத்த ஒரு பரிசு ஆகும். நீங்கள் நித்திய வாழ்வை விலை கொடுத்து வாங்க முடியாது. ஏனென்றால் அது ஏற்கனவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை விலையாகக் கொடுத்து வாங்கப்பட் டுவிட்டது.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நீங்கள் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது என்பதை உணர வேண்டும். பின் இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக இப்பொழுதே ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் உங்களை இரட்சிப்பார்.

ரோமர் 10:9 "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்".

பாவியான நண்பனே, இந்த நிமிஷத்திலே உங்கள் தலையைத் தாழ்த்தி பாவியாகிய என்னை மன்னியும் என்று இயேசுவிடம் கேளுங்கள், ஒரு பாவியாகிய என்னை இரட்சியும் என்று அவரிடம் கேளுங்கள். அவர் நிச்சயமாக இரட்சிப்பார்.

ரோமர் 10:13 "ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்".

Iயோவான் 5:10-12 "தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்த சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; தேவனை விசுவாசியாதவனோ, தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால், அவரை பொய்யராக்குகிறான். தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாகும். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.